புதுச்சேரி அரசு

போக்குவரத்துத் துறை

***

எண்: 04/போ.து./2014/27 தேதி: 30.06.2014

## செய்திக் குறிப்பு

## போக்குவரத்து வாகன பெர்மிட் விண்ணப்பதாரர்கள் கவனத்திற்கு

புதுச்சேரியில் கடந்த அக்டோபர் மாதம் முதல் போக்குவரத்து வாகனங்களுக்கு தொடர்ந்து அனுமதி (பெர்மிட்) வழங்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து வாகன பெர்மிட் பெறுவதற்கான உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்பவர்களுக்கு உடனடியாக அதற்குரிய ஆணை (புரஸிடிங்) வழங்கப்படுகிறது. அதன்பின்னர் நான்கு மாதங்களுக்குள் போக்குவரத்து பெர்மிட் பெற விரும்பும் வாகனத்தை ஆய்வு செய்த பின்னர் பெர்மிட் வழங்கப்படுகிறது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 30.06.2014 வரை 1233 விண்ணப்பதாரரர்களுக்கு போக்குவரத்து வாகன பெர்மிட் பெறுவதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் 286 வாகனங்களுக்கு மட்டுமே போக்குவரத்து வாகன பெர்மிட் பெற்றுள்ளனர். விண்ணப்பதாரர் பலர் ஆணையில் குறிப்பிட்டுள்ள காலக்கெடு முடிந்த பின்னர் காலககெடுவை நீட்டிக்க வேண்டி விண்ணப்பம் செய்து வருகின்றனர்.

போக்குவரத்து வாகன பெர்மிட் பெற விரும்புவோர் அனைவரும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவான நான்கு மாதங்களுக்குள் வாகனங்களை ஆய்வுக்கு உட்படுத்தி உரிய பெர்மிட் பெறவேண்டும். புதிய வாகனம் வாங்குவதில் காலதாமதம் ஏற்படுமேயானால் வாகனம் வாங்குவதற்குத் தாம் மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு ஆதாரமான ஆவணங்களுடன் போக்குவரத்துத் துறையை அணுகினால் மட்டுமே ஒரு மாதம் வரை கால அவகாசம் வழங்கப்படும். ஆதாரங்களின்றி போக்குவரத்துத்துறையை அணுகுவார்களாயின் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் அவர்கள் செலுத்திய விண்ணப்பக் கட்டணமும் திருப்பி வழங்கப்படமாட்டாது. அவர்கள் மீண்டும் புதிதாக விண்ணப்பக் கட்டணம் செலுத்தி விண்ணப்பம் செய்ய வேண்டும்.

போக்குவரத்து வாகன பெர்மிட் பெற விரும்புவோர் துரிதமாக செயல்பட்டு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் வாகனங்களை காண்பித்து உரிய போக்குவரத்து வாகன பெர்மிட் பெற்றுககொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

GOVT. OF PONDICHERRY
TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்துத் ஆணையர்